1968 மார்ச் 6]

திரு. இல. பலராமன் : வட ஆர்க்காட்டில் ஜீப் பஸ்கள் விட இருக்கிற தென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் மலைப் பிரதேசமாக இருப்பதால் அங்கே ஜீப் பஸ்கள் விடவேண்டுமென்று அனுமதி கோரி பல மனுக்கள் அனுப்பியும் அங்கீகாரம் அளிக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அங்கீகாரம் வழங்க எந்தத் தடையும் இல்லை. அவர்களுக்கு ஜீப் பஸ்கள் கிடைப்பதில் அதிக சிரமம் இருக்கிறது என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

திரு டி மார்டின் : நெல்லை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியாகிய சாத்தான்குளம் தொகுதியில் மணற்பாங்கான இடமாகவும் அகன்ற பாதைகள் இல்லாத இடமாகவும் இருப்பதால் அங்கே ஜீப் பஸ்களை விடுவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படியில்லையென்றால் அதற்கான முயற்சி யெடுத்து ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த அரசுக்கு அந்த உத்தேசம் இல்லை. யாராவது ஜீப் பஸ்களை விடுவதற்கு முன் வந்தால் இந்த அரசு அதை வரவேற்கும்.

பஸ்களை அதி வேகமாக ஓட்டுதல்

*153 வினா—திரு. கரு. சிவமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசாங்க பஸ்களை ஓட்டிச் செல்லும் பஸ் டிரைவர்கள் அதிக வேகமாக பஸ்களை ஓட்டிச் செல்வதாக பொது மக்களிடமிருந்து 1967 ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் ஏதாவது புகார் வந்ததா?

(இ) ஆம் என்றால் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தவறு செய்த வலவர்கள் (Drivers) மீது தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையினரால் தக்கவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : The question refers to overspeeding of buses in August and September 1967. Has there been any usual increase in the number of accidents due to overspeed during these two months as compared to the previous months or previous years ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தக் கணக்கு இல்லை. வேகமாக டிரைவர்கள் ஓட்டிக் கொண்டு செல்கிறார்கள் என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

திரு. கே. விநயகம் : அரசாங்க பஸ்கள் ஓவர்ஸ்பீட் ஆகப் போவது மாத்திரம் அந்தத் துறையிலே இருப்பவர்கள் குற்றம் செய்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அதைவிட இன்னும் பல குறைகள் சொல்லப் படுகின்றன. பஸ் ஸ்டாண்டில பொதுமக்கள் நின்று கொண்டிருந்தாலும் அவர்கள் கைகாட்டினாலும் நிறுத்தாமல் போவது, அவர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் முன்புறம் இறங்குவதற்குப் பதில் பின்புறம் இறங்குவதுபோன்ற பல குற்றங்கள் இருக்கின்றன. ஆகையால், டிரைவர்களைய

கண்டக்டர்களையும் ஒன்றாகக் கூட்டி இப்படியிப்படித்தான் நடக்க வேண்டுமென்று விதிமுறைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற அளவில் மாதந்தோறும் வகுப்புகள் நடத்தி அப்படிப்பட்ட குறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது பற்றி இப்போது டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் எடுத்துச் சொல்லுகின்ற அளவிலே 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி ஒரு அறிக்கை பொதுவாக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை நான் இங்கே படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுற்றறிக்கை எண். 20/68

பொருள்: விபத்துக்கள்— ஓட்டுநரின் கவனக் குறைவால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க—அறிவுரை.

தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் கடந்த ஆறு ஆண்டுகளில் ஓட்டுநர்களின் கவனக் குறைவால் ஏற்பட்ட விபத்துக்களில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டே வருகிறது. ஓட்டுநர்கள் இதனை மனதில் கொண்டு பிற உயிர்களைத் தன் உயிர்போல் காத்து விபத்துக்களைத் தவிர்க்க வேண்டுமாய், மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. ஓட்டுநர்களின் ஓட்டும் முறையில் அதிருப்தியோ அல்லது கவனக் குறைவோ காணப்பட்டால், அவர்களை வழித் தடங்களிலிருந்து திரும்பப் பெற்று மீண்டும் ஓட்டுநர் பயிற்சிக்கு அனுப்ப கூட்டு இயக்குநர் அதிகாரம் பெற்றவராயிருக்கிறார் என்பதை ஓட்டுநர்கள் மனதில் கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

என்ற முறையில் இந்த அறிக்கை விடப்பட்டிருக்கிறது.

திருமதி வி. பா. பழனியம்மாள்: பல்லடத்தில் இருந்து கோவைக்குச் செல்லும் பாதையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் ஒரு காரின் மீது மோதி அந்தக் காரில் இருந்தவர்கள் அப்போதே இறந்துவிட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. தகவல் இருந்தால் அம்மையார் அவர்கள் அனுப்பலாம்.

திரு. ஏ. எம். ராஜா: டிரைவர்களை நியமிக்கும்போது அணைக்கட்டுகளிலே 10, 15 ஆண்டுகள் வேலை செய்திருக்கிற டிரைவர்களை அரசாங்க பஸ்களை ஓட்டுவதற்கு நியமிக்கத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசியமயமாக்கும் கொள்கையில் தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அணைக்கட்டிலே வேலை செய்கிறவர்களை எடுத்துக் கொள்வது என்பது பிறகு யோசிக்கப்படும்.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே. வெளியூர்களுக்குச் செல்லும் விரைவு வண்டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் கொஞ்சம் அதிகம் என்று கருதப்படுகிறது. உதாரணமாக திருச்சியிலிருந்து சென்னை வருவதற்கு 8 மணி நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ½ மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் குறைத்துக் கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுதே பஸ்கள் வேகமாக ஓடுகின்றன. அந்த நேரத்தை இன்னும் குறைத்துக் கொடுத்தால் அதி வேகமாக ஓட்ட வேண்டியிருக்கும். அதனால் ஆபத்துகள் உண்டாகும்